தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**10 வயதுப்பிரிவு**
(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)

## பிரிகேடியர் துர்க்கா

ஆனந்தபுர முற்றுகைச் சமரின் வரலாற்று வீரர்களுள் ஒருவரே பிரிகேடியர் துர்க்கா. 1989ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டவர். தாய்நாட்டை ஆழமாக நேசித்து தன் இறுதி மூச்சுவரை தலைவர் மாமாவின் வழி நடந்த தளபதி.

எதிலும் முடியாது, தெரியாது என்று விட்டு ஒதுங்காத ஓர்மம். கோபத்தில் கூடக் கடிந்து பேசாத பண்பு மிக்கவர். மருத்துவப் போராளியாகவும் சோதியா படையணியின் சிறப்புத் தளபதியாகவும் வலம் வந்த பேராளுமை. கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் போரியல் ஆற்றல்களைத் தன்னகத்தே வளர்த்துக்கொண்டவர்.

‘‘அண்ணா! எங்களை நம்புங்கள், நீங்கள் வெளியே இருந்து கட்டளை இடுங்கள். நாங்கள் அதனைச் செயற்படுத்துகிறோம். நீங்கள் எங்களுக்கு மட்டுமல்ல எங்கள் மக்களுடைய பெரும் சொத்து. அதனால், தயவுசெய்து ஆனந்தபுரத்திலிருந்து வெளியேறுங்கள். இதனை உலகெங்கும் பரந்து வாழ்கின்ற எங்களுடைய தமிழ்மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.’’ இதுவே காலம் எமக்களித்த வல்லமையாம் தலைவர் மாமாவுக்கு அவர் எழுதிய இறுதிமடல்.

நெருக்கடியான களச்சூழல்களைத் தங்கள் அர்ப்பணிப்புகளால் நேர்த்தியாக்கிய பெருந்தளபதிகளுள் ஒருவரான பிரிகேடியர் துர்க்கா, 2009 ஏப்ரல் நான்காம் நாள் ஆனந்தபுர மண்ணிலே தமிழீழ விடுதலைக்கு வித்தானார். அவர் கனவாம் தமிழீழத் திருநாட்டை மீட்டாள்வோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”